

இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு மேற்கு ஒன்றியம் அரப்பாக்கம் அன்னை மீரா தொழில்நுட்ப கல்லூரியில் மாபெரும் கல்விக் கடன் முகாம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, மாணவ – மாணவிகளுக்கு உதவி தொகை வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, ஆற்காடு ஒன்றிய குழு தலைவர் புவனேஸ்வரி சந்தியானந்தம் ,ஆற்காடு ஒன்றிய குழு துணை தலைவர் ஸ்ரீமதி நந்தகுமார், கல்லூரி தலைவர் எஸ்.இராமதாஸ் கல்லூரி செயலாளர் ஜி.தாமோதரன் நகர மன்ற துணை தலைவர் குல் சார் அகமத் மேலகுப்பம் ஊராட்சி மன்ற தலைவர் பாஸ்கர் முன்னோடிவங்கி மேலாளர் ராம்ஜி குமார் பொதுமேலாளர் மாவட்ட தொழில் மையம் ஆனந்தன், மாவட்ட மேலாளர் அமுதா ஒன்றிய செயலாளர் ஏ.வி.நந்தகுமார் அவைத்தலைவர் தண்டபாணி, ஒன்றிய கவுன்சிலர் கோபாலகிருஷ்ணன் , துணை தலைவர் நந்தினி வினோத்குமார், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் தீலிப் அவைத்தலைவர் இமாயூன் மாவட்ட பிரதிநிதி இம்தியாஸ் நகர மன்ற உறுப்பினர்கள் ஜாபர் காதர் ஆலிம் மற்றும் மாணவ மாணவிகள் அனைத்து வங்கி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கோயம்புத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில் ஈச்சனாரி ரத்தினம் கலை அறிவியல் கல்லூரியில் மாபெரும் வேலை வாய்ப்பு முகாமினை 21.09.2024 அன்று அமைச்சர் சி.வி.கணேசன் தொடங்கி வைத்து பணி நியமன ஆணைகளை வழங்கினார். அருகில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அரசு செயலர் கொ.வீரராகவராவ் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் திருமதி. எ.சுந்தரவல்லி, மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி பொள்ளாச்சி நாடளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி.கே.ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன், மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) திருமதி.ஆ.ஜோதிமணி, இரத்தினம் குழும நிறுவனங்கள் தலைவர் டாக்டர்.மதன். ஏ. செந்தில், கோயம்புத்தூர் தெற்கு மண்டல குழு தலைவர் திருமதி.ர.தனலெட்சுமி, மாவட்ட வேலை வாய்ப்புத் துறை அலுவலர் கருணாகரன், மாநகராட்சி பணிகள் குழு தலைவர் திருமதி.சாந்தி முருகன், ஆகியோர் உள்ளனர்

### வி.ஜி.பி.உலகத் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து- ‘கவிதை உறவு’ இலக்கிய அமைப்பு நடத்தும்

# 100 கவிஞர்களுக்கு கலைஞர் விருதுகள்! அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கி சிறப்புரை!

## டாக்டர் வி.ஜி.சந்தோசம் தலைமையில் நிகழ்ச்சி நடைபெறுகிறது!

சென்னை, செப்.23-

வி.ஜி.பி. உலகத் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து ‘கவிதை உறவு’ இலக்கிய அமைப்பு நடத்தும் 100 கவிஞர்களுக்கு கலைஞர் விருது வழங்கும் விழா இன்று (23.9.2024 திங்கட் கிழமை ) மாலை 5.30 மணி அளவில் ராணி சீதை மன்றம், அண்ணா சாலையில் நடைபெறுகிறது.

செல்வி வர்ஷினி ஜி. ஜே.வின் வரவேற்பு நடனத்துடன் துவங்கும் நிகழ்ச்சியில், கர்நாடக இசைப் பாடகி லலிதா மோகன் தமிழ்த்தாய் வாழ்த்து பாடுகிறார்.

கலைமாமணி ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் வரவேற்புரையாற்றுகிறார்.

நிகழ்ச்சியில் செவாலியே டாக்டர் வி.ஜி.சந்தோஷம் தலைமையேற்று உரையாற்றுகிறார். டாக்டர் ஜெயராஜமூர்த்தி, கவிச்சுடர் கவிதைப் பித்தன் ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் 100 கவிஞர்களுக்கு விருதுகள் வழங்கி வாழ்த்துரை வழங்குகிறார்.

கவிஞர் தமிழ் இயலன், கவிஞர் எஸ்.விஜய கிருஷ்ணன் ஆகியோர் விருதுகள் வழங்கல் குறித்து நெறியாள்கின்றனர்.

புலவர் சு.மதியழகன் நன்றி கூறுகிறார். நிகழ்ச்சியை திருமதி ரேகா மணி தொகுத்து வழங்குகிறார்.

கவிஞர்களும்,சுவைஞர்களும், அறிஞர்களும், ஆன்றோர்களுமாய் அரங்கம் நிறைய குழுமி முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் பாடி போற்றுவோம் வாரீர் என கூல் ஈவன்ட்ஸ் குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

### முறைகேடுகளில் சிக்கியுள்ள

# ‘செபி’ தலைவர் குறித்த தகவல்களை தர மறுப்பது ஏன்?

## ஒன்றிய அரசுக்கு காங்கிரஸ் கேள்வி!

புதுடெல்லி, செப். 23-

முறைகேடு புகார்களில் சிக்கி உள்ள ‘செபி’ தலைவர் மாதபி புச்சின் நியமனம் குறித்த தகவல்களை தர ஒன்றிய அரசு மறுப்பது ஏன்? என காங்கிரஸ் கேள்வி எழுப்பி உள்ளது.

இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் தலைவராக மாதபி புச் எப்போது நியமிக்கப்பட்டார், எப்போது அந்தப் பதவிக்கு விண்ணப்பித்தார், பதவியேற்கும் போது அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் இருந்த சொத்துக்களின் விவரங்கள் மற்றும் அரசுக்கும், செபிக்கும் அவர் அளித்த உறுதிமொழி விவரங்கள், தனிப்பட்ட முரண்பாடுகள் காரணமாக மாதபி புச் விலகிக் கொண்ட வழக்குகள் விவரம் ஆகியவற்றை வழங்குமாறு ஆர்.டி.ஐ. ஆர்வலர் ஒருவர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் விண்ணப்பம் அளித்திருந்தார். ஆனால் இந்த தகவல்களை தர மறுத்த செபி, இவை தனிப்பட்ட விஷயங்கள் என்று பதிலளித்தது. இது குறித்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ள காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ், செபி தலைவர் குறித்த பலமுரண்பாடுகள் இதுவரை வெளியாகி அதிர்ச்சி அளித்துள்ளதாகவும்,ஒன்றிய அரசின் இந்தச் செயல் எரியும் தீயில் எண்ணெய் ஊற்றும் வகையில் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இந்த விவகாரத்தில் தகவல்களை வெளியிடாமல் மறைத்து, வெளிப்படைத் தன்மையை செபி கேலிக் கூத்தாக்கி உள்ளதாகவும் ஜெய்ராம் ரமேஷ் விமர்சித்துள்ளார்.

### எம்.எல்.ரவி தலைமை ! வ.பெ.சுரேஷ் முன்னிலை!

# 48(அ) வட்டக் கழக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம்! ஆர்.டி.சேகர் சிறப்புரை!

## கலாநிதி வீராசாமி – ஐட்ரீம் இரா.மூர்த்தி – என்.நவீன் பங்கேற்பு!

சென்னை, செப்.23-

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் மேற்கு பகுதி 48(அ) வட்ட கழக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (23.09.2024 திங்கட்கிழமை) மாலை 6:00 மணியளவில் பி.எம்.கே.மஹால் நிஜாம் பேலஸ் முத்தையாமுதலி தெருவில் நடைபெறுகிறது.

வட்ட கழக செயலாளர் எம்.எல்.ரவி, தலைமை வகிக்கிறார். இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ் முன்னிலை வகிக்கிறார்.

விஜயலட்சுமி விஜயகுமார் எம்.சி, எம்.கே.இஸ்மாயில், கு.ரமேஷ், இ.மதன், எஸ்.திருஞானம், வி.மலையம்மாள், ரெயின்போ என். விஜயகுமார், எம்.பாலாஜி, மோ.ரவிகுமார், மு.ராசன், ர.இம்ரான், கே.அக்தரி பேகம், இரா.ரவிந்திரன், கே. விஜய்,

க.லோகநாதன், இ. சௌந்தரபாண்டியன், ஜி.கொலம்பஸ், வி.சரவணன், எஸ்.உமாபதி, எம். குமரவேல், பா.லியாகத் பாஷா, இரா.சரவணன், பி. திவ்யபாரதி, எஸ்.இந்திரா, டி.பாஸ்கர், கே.கண்ணன், பி.பாஸ்கர், ஜெ.ஷாகிரா பானு, ஜெ.ஜாகீர்பேக், எம். ஷாபுதின், ஆர்.ரேவதி, வி. நந்தகுமார், ஆட்டோ தேவராஜ், இ.மணிகண்டன், பி. கலீல், எம்.வெற்றிவேந்தன், டி.சங்கர், ஜி.ராஜி, சுவிஸ் இளையராஜா, ஆகியோர் வரவேற்கின்றனர்.

கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, என்.நவீன், ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் தா.இளைய அருணா, பி.டி.பாண்டி செல்வம், ந.மனோகரன், ஆர்.வெற்றிவீரன், மு. கோபி, எஸ்.ஆர்.கமலக்கண்ணன், க.நாகம்மை, வி.தயாளன், கி.ராஜேந்திரன், நா. சண்முகம், வே.சிவக்குமார், ஜெ.கே.நாதன், க.கோவிந்தசாமி, ப.சோமசுந்தர மூர்த்தி, லியோ டி.சுரேஷ், கார்த்திக் செங்குட்டுவன், லயன் என்.தீனதயாளன், லட்சுமிவேலு, கே.என். பார்த்திபன், நா.கஜேந்திரன், டைசெந்தில், த.ரவி, என்.குமார், எஸ்.யுவராஜ், இரா.பொன்முடி, எஸ். சுரேஷ், எம்.பாலசுப்பரமணி,

ஆர்.மீனா, பி.சம்பூரணம், கே.எ.அமீர்அசன், கே.அப்துல்அமீது, பிக்ஷள் வேணு, பிர்ள்உதயா, இ. மூர்த்தி, சரஸ்வதி, கே.தணிகாச்சலம், எஸ்.தேவி, ஜி. ரசூல்பி, இ.சாமிகண்ணன், பி.ராஜேஸ்வரி, பாலாஜிலால், ஜி.வரதன், கிஷோர்ஷா, பி.விஷால், குருமூர்த்தி, இரா.விக்னேஷ், ஜி.மூர்த்தி, பி.தங்கம், எஸ். கஜேந்திரன், வி.தயாளன், க.கலையரசன், பார்வதி பாய், கே.ஷகின்ஷா, ஆர். அமீன், எஸ்.சந்தோஷ்குமார், மணிகண்டன், மா. அஸ்லாம், அப்துல்லா, திராவிடலோகு, ஆட்டோ கௌஸ், ஆர்.மாலிக், எஸ். அகமது, கே.அல்தாப், பன்டைராஜி, எம்.பயாஸ் பாஷா, கே.வேலு, அபிசுல்லா, உசேன், ஒய். பயாஸ், பா.அப்ரி, சி.நகிம், எம்.அப்துல்லா, கே.வசிம், கே.இம்ரான், எம்.அசேன், ஆர்.ஷாருக், ஜெ.ஹசின், ஒய்.பசுலுஷெரிப், இம்தியாஸ்அகமது, என்.முரளி, அருண்குமார், மணிகண்டன், உசேன், ஷாஜகான், சீனிவாசன் பி.அல்தாப், பி. கோபி, வி.சண்முகம், வி. நாராயணன், கே. லோகேஷ், எம்.நவீன், சேகர், எஸ். விஜய், எஸ்.வசந்த், கே. ராணி, எஸ்.லட்சுமி, கே. மணி, ஆர்.வள்ளி, நியமத்கான், கலில்ரகுமான், சையத் யுனத், ஏ.எஸ்.முகமதுசுபேர், எம்.பாரூக்பாஷா, வி.தமிழரசன், ரஹமத்துல்லா, பாரூக் பாஷா, அப்துல்ரகுமான், எம்.எம்.சுஜாவுதீன், ஜி.தனசேகர், நா.ஆயிஷா, ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### முதலமைச்சர் கோப்பை –

# அரசு நிறுவனங்களுக்கு இடையேயான கேரம் போட்டி!

## மின்கழகத் தொமுச பொதுச்செயலாளர் பா.மணிமாறன் இணையர் வெற்றி

சென்னை, செப்.23-

அரசு நிறுவனங்களுக்கிடையே நடைபெற்ற முதலமைச்சர் கோப்பைக்கான கேரம் விளையாட்டு போட்டியில், சென்னை மாவட்டத்தில் மின்சார வாரியத்தின் சார்பாக மின்கழகத் தொமுச பொதுச்செயலாளர் பா. மணிமாறன் இரட்டையர் பிரிவில் வெற்றி பெற்று முதல் இடத்தை பிடித்தார்கள்.

சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் 21.9.2024 அரசு நிறுவனங்களுக்கிடையான கேரம் விளையாட்டு போட்டி நடைபெற்றது.

இதில் சென்னை மாவட்டத்தில் அனைத்து அரசு நிறுவனங்களுக்கிடையே நடைபெற்ற கேரம் விளையாட்டு போட்டியில் மின்சார வாரியத்தின் சார்பாக கலந்துகொண்ட மின் கழகத் தொமுச பொதுச் செயலாளர் பா. மணிமாறன், ரா. தனசேகரன், திட்ட துணைச் செயலாளர்/ சென்னை தெற்கு 1, மின் கழகத் தொமுச இணையர், இரட்டையர் பிரிவில் வெற்றி பெற்று முதலிடம் பிடித்தார்கள்.

சென்னை மாவட்டத்தின் சார்பாக வெற்றி பெற்ற பா. மணிமாறன் மற்றும் இணையர் ஜோடி அடுத்த மாதம் (அக்டோபர்) 21, 22, 23 தேதிகளில் திருச்சியில் மாநில அளவில் நடைபெறும் கேரம் விளையாட்டு போட்டியில் சென்னையின் சார்பாக கலந்து கொள்ள தேர்வு செய்யப் பட்டார்கள்.

### சென்னை பெருநகர மாநகராட்சி

# தி.மு.க. மாமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாமன்ற கொறடா எ.நாகராஜன் அறிவிப்பு!

சென்னை, செப். 22 -

பெருநகர சென்னை மாநகராட்சி, தி.மு.க. மாமன்ற உறுப்பினர்களின் ஆலோசனை கூட்டம் வரும் 25 அன்று நடைபெறுகிறது என மன்ற ஆளுங் கட்சி கொறடா எ.நாகராஜன் விடுத்து அறிவிப்பு வருமாறு:-

பெருநகர சென்னை மாநகராட்சி, தி.மு.க. மாமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம், வருகின்ற 25.09.2024 புதன் கிழமை காலை 11.00 மணியளவில் ரிப்பன் கட்டடம் 2வது மாடியில் உள்ள ஆலோசனைக் கூடத்தில், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம் தலைமையில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் மேயர் திருமதி.ஆர்.பிரியா மற்றும் துணை மேயர் மு.மகேஷ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுக்கின்றனர்.

எனவே, மாமன்ற தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பொருள்: 27.09.2024 அன்று நடைபெறும் மாமன்ற கூட்டம் தொடர்பாக

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சாலவாக்கம், ஒன்றியத்துக்குட்பட்ட குருமஞ்சேரி ஊராட்சி அ.தி.மு.க. கிளைச் செயலாளர் மனோகரன், பிரதிநிதி சுலோச்சனா, தே.மு.தி.க. கிளை செயலாளர் ரஜினி செந்தாமரை ஆகியோர் உட்பட 50 க்கும் மேற்பட்டோர் அக்கட்சிகளிலிருந்து விலகி காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் சாலவாக்கம் ஒன்றிய செயலாளர் டி. குமார், ஒன்றிய நிர்வாகிகள் வி.வி. அழகப்பன், ஆ.தர்மராஜ், சாலவாக்கம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் இ.நந்தா, குருமஞ்சேரி ஊராட்சி முன்னாள் தலைவர் ரமேஷ், கிளைச் செயலாளர்கள் வேதாசலம், விஜய பாபு, மற்றும் கடமநாதன், பொன்னுரங்கம், சசிதரன், ஹேமலதா, தனஞ்செழியன், சுகன், முரசொலி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# இராசிபுரத்தில் 8 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பங்கேற்பு!

நாமக்கல், செப். 23-

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மூலப்பள்ளிப்பட்டி, ஈஸ்வரமூர்த்திபாளையம், திம்ம நாயக்கன்பட்டி, மத்துருட்டு, மங்களபுரம், ஆயில்பட்டி மற்றும் கார்கூடல்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ரூ.5.26 கோடி 8 புதிய திட்டப்பணி களுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் 2 குடிநீர் சுத்தி கரிப்பு நிலையங்களை திறந்து வைத்தார்.

வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் இராசிபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், இராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மூலப்பள்ளிப்பட்டி மற்றும் திம்ம நாயக்கன்பட்டி ஊராட்சிகளில் தலா ரூ.8.00 இலட்சம் என மொத்தம் ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள மேற்கூரை அமைப்புடன் கூடிய 22 எதிர் சவ்வூடு பரவல் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், நாமகிரிப்பேட்டை கழகச் செயலாளருமான கே.பி.இராமசுவாமி மற்றும் ஊராட்சி தலைவர்கள், கழக தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து, இராசிபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், மூலப்பள்ளிப்பட்டி ஊராட்சியில் ரூ.9.16 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கு மாதா கோயில் முதல் பசிரிமலை சாலை வரை 130 மீ நீளம், 4.5 மீ அகலத்திற்கு சிமென்ட் கான்கிரீட் சாலை அமைத்தல், ரூ.9.16 இலட்சம் மதிப்பீட்டில் மாதா கோயில் அருகில் சிறுபாலம் அமைக்கும் பணி, ஈஸ்வரமூர்த்திபாளையம் ஊராட்சியில் ரூ.10.25 இலட்சம் மதிப்பீட்டில் காத்தாகவுண்டனூர் ராஜ் வீடு முதல் சின்னதம்பி வீடு வரை 155 மீ நீளம், 4 மீ அகலத் திற்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி, ரூ.7.32 இலட்சம் மதிப்பீட்டில் காத்தாகவுண்டனூர் நடுவீதி நடேசன் வீடு முதல் டி.வி ரூம் வரை 82 மீ நீளம், 4 மீ அகலத்திற்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி, பாரத பிரதமர் சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.3.14 கோடி மதிப்பீட்டில் ஆத்தூர் மெயின் ரோடு முதல் சிங்கிலியன் கோம்பை சாலை வழி தாண்டாகவுண்டன் பாளை யம் மூலக்காடு வேம்பாகவுண்டன் புதூர் வரை தார் சாலை அமைக்கும் பணி, ரூ.1.79 கோடி மதிப்பீட்டில் ஆயில்பட்டி ஊராட்சி ஊத்துப்புளிகாடு வழி ஆண்டிகுட்டை சாலை வரை தார் சாலை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.




நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட பரமத்தி வேலூர், திருச்செங்கோடு, குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நேர்காணல் மற்றும் கல்லூரியில் தமிழ் மாணவர் மன்றம் அமைக்க ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் மேற்கு மாவட்ட கழக அலுவலகம், திருச்செங்கோடு, வேலூர் ரோடு, தளபதியார் அரங்கில் மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில் மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ்.மோகன், துணைச் செயலாளர்கள் சேலம்.ரா.தமிழரசன், கா.பொன்ராஜ், வி.ஜி.கோகுல், கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த் ஆகியோர்கள் முன்னிலையில் நேர்காணல் நடைபெற்றது. வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். நேர்காணலில் 200க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பாலசுப்ரமணியம் துணை அமைப்பாளர்கள் ஐயப்பன் (எ) பெருமாள் தங்கமணி, ராகேஷ் கண்ணன், லாவண்யா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.